# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH

O.S.No.73/2024

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | கோபால் |
| Father's Name | : | பரமசிவன் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 61 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.03.2026.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 28.08.1973 தேதிய வாதியின் பாட்டி வடிவு என்பவர் தனதுமக்களுக்கு எழுதிவைத்த நன்கொடை ஆவணத்தின் கணினி வழி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 30.09.1974 தேதியில் பிராது சொத்தில் பாத்திமாபீவி எழுதிக்கொடுத்த ஒத்தி ஆவணம் இணையவழி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 16.08.1979 தேதியில் ஆறுமுகம்பிள்ளை பெயருக்கு ஏற்பட்ட ஒத்தி ஆவணத்தின் இணையவழி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 16.08.1979 தேதியில் பாத்திமாபீவி எழுதிகொடுத்த ஒத்தி பணப்பற்று ரசீது இணையவழி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 30.08.1989 தேதியில் இதயத்துல்லா என்பவருக்கு எழுதிக்கொடுத்த அடமான ஆதரவு ஆவணம் இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 21.09.1992 தேதியில் இதயத்துல்லா அடமானத்தை செல்லடித்த பணப்பற்று ரசீது இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 28.07.2015 1,2 பிரதிவாதிகளின் தந்தையார் சுப்பையா என்பவர், 6ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள ஏற்பாட்டு ஆவணம் கணினி வழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 12.10.2017 தேதியில் 7ம் பிரதிவாதி, 8ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த அடமான ஆவணத்தின் கணினி வழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. வாதி, பிரதிவாதிகளின் உறவுமுறையை காட்டும் கொடிவழி ஜாபிதா வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-K.N.Guru
District Munsif, Shenkottai